
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1252

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

64

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# விவசாயத்துக்கு இலவச மின்சாரம்: நிதிச்சுமையா? சமூக நீதியா?



1990-ஆம் ஆண்டு கலைஞர் தலைமையில் அமைந்த கழக அரசு, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவை எடுத்தது. அந்த முடிவு திடீரென எடுக்கப்பட்டதல்ல. 1978-ஆம் ஆண்டு நாராயணசாமி நாயுடு தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டம், துப்பாக்கிச் சூடுகள், விவசாயச் சங்கங்களின் நீண்டகால கோரிக்கைகள் ஆகியவற்றின் அரசியல் விளைவாக இருந்தாலும், அதை நிறைவேற்றித் தரும் இடத்தில் கலைஞர் இருந்தார் என்பது மட்டுமே வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது.

ஏனென்றால், அப்போது எதிர்க்கட்சிகளும் பொருளாதார வல்லுநர்களும், அரசு அதிகாரிகளும் எழுப்பிய மிக முக்கியமான கேள்வி, 'இலவச மின்சாரம் வழங்கினால், மின்வாரியம் எப்படி இயங்கும்?' என்பதுதான். அந்த வாதங்களுக்குப் பதிலளிக்கவும், அதற்கான இழப்பினை ஈடுசெய்யவும் கலைஞரிடம் இருந்த நிர்வாகத் திறனும் சமூக நீதியிலான பார்வையும் அதற்கு முன் இருந்தவரிடமும் அவருக்குப் பின் ஆட்சி அமைத்தவரிடமும் இல்லை.

'விவசாயம் என்பது தொழில் மட்டுமல்ல; உணவுப் பாதுகாப்பின் அடித்தளம். விவசாயிக்கு மின்சாரம் என்பது உற்பத்திச் செலவின் முக்கிய அங்கம். அந்தச் செலவைக் குறைப்பது அரசின் பொறுப்பு' என்ற கொள்கை அடிப்படையில் இலவச மின்சாரத்தினை நிறைவேற்றித் தந்தார் கலைஞர்.

நீண்டகாலப் போராட்டமும் கலைஞரின் கொள்கை முடிவும் தமிழ்நாட்டின் விவசாயிகளுக்குப் பெரும் பற்றினை அளித்த நிலையில் தான், 1991-இல் ஆட்சிக்கு வந்த அம்மையார், 1992-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 2-ஆம் தேதி வெளியிட்ட அரசாணையின்மூலம் இலவச மின்சாரத் திட்டத்தை ரத்துசெய்வதாக அறிவித்தார். 'இலவச மின்சாரம் நீடிக்கும்' எனத் தேர்தல் வாக்குறுதியில் அறிவித்திருந்த அம்மையார், ஆட்சிக்கு வந்ததும் அதை ரத்து செய்தார். அதன்மூலம் விவசாயிகளுக்குத் துரோகம் இழைக்க முயன்றார். அதற்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

அதே வேகத்தில், விவசாயச் சங்கங்கள் சார்பாகவும் அனைத்துக் கட்சிகள் சார்பாகவும் வேலை நிறுத்தப் போராட்டம் அறிவிக்கப்பட்டது. மதுரையில், அனைத்துக் கட்சிகள் சார்பில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. ஜூன் 13-ஆம் தேதி, கழகத்தின் சார்பில் வாகனப் பேரணி அரசின் தடையை மீறி நடைபெற்றது. அப்போது தமிழ்நாடு முழுவதும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட கழகத்தினர் ஒரே நாளில் கைதாகினர். தமிழ்நாடு முழுவதும் எழுந்த எதிர்ப்பினைச் சமாளிக்க முடியாத அம்மையார் அரசு, ஜூன் 18 அன்று, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் ரத்துசெய்யப்பட்ட அரசாணையைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாக அறிவித்தது. 'அனைத்து விவசாய பம்புசெட்டுகளுக்கும் இலவச மின்சாரம் தொடரும்' என அறிவித்தது.

### நிர்வாகத் திறனின்மை

அப்போது, அரசின் நிதிநிலையை முக்கியக் காரணமாக முன்வைத்தார், அப்போதைய முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா. சட்டப்பேரவையில், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதற்காக ஆண்டுக்கு சுமார் ரூ.2,600 கோடி அளவுக்கு மின்வாரியத்திற்கு குறுக்கு மானியம் (CROSS SUBSIDY) வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். குறிப்பாக, உலக வங்கியின் நிபந்தனைகள் காரணமாக மின்வாரியத்திற்கு நேரடி மானியம் வழங்க முடியாத சூழல் உருவாகியது. அதனால், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நேரடி பண உதவி வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டதாகவும் விளக்கமளித்தார்.

1991-ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் கலைஞர் கொண்டுவந்த திட்டம் என்பதால், அந்த வெற்றிக்குப் பின்னால், பல சக்திகள் இருந்தாலும், முதன்மை சக்தியாக இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

ஆனாலும், விவசாயத்துக்கு இலவச மின்சாரத் திட்டத்துக்கான அபாயம் நீங்கிவிடவில்லை. இதுதொடர்பாக ஒன்றிய அரசுக்கு இருந்த பார்வை, 'மின்சார ஒழுங்குமுறை மசோதா' மூலம் 2003-ஆம் ஆண்டில் புதிய சிக்கலைக் கொண்டுவந்தது. சட்ட நெருக்கடியையும் உருவாக்கியது.

'விவசாய மின் இணைப்புகளுக்கு மீட்டர் பொருத்த வேண்டும், உண்மையான மின் பயன்பாட்டைக் கணக்கிட வேண்டும், மின்சாரத்தைப் பொருளாதாரரீதியாக நிர்வகிக்க வேண்டும் என்று அந்த மசோதா வலியுறுத்தியது. அதையடுத்து, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (TNERC) தனது முதல் முக்கிய கட்டண ஆணையில், விவசாயிகளுக்கான இலவச மின்சாரத்தை நீக்கி, கட்டணம் விதிக்கும் முடிவை அறிவித்தது. மீட்டர் பொருத்தப்பட்ட இணைப்புகளுக்கு யூனிட்டுக்கு 20 பைசா, மீட்டர் இல்லாத இணைப்புகளுக்குக் குதிரைத்திறன் (HP) ஒன்றுக்கு, ஆண்டுக்கு ரூ.250 கட்டணம் நிர்ணயித்தது. அப்போது, 15.04 இலட்சம் விவசாய மின் இணைப்புகள் இருந்தன. அதில், 9.41 இலட்சம் பேர் சிறு மற்றும் குறு விவசாயிகள்.



> **மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் பார்வை முற்றிலும் பொருளாதார அடிப்படையிலானது. ஆனால், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்கிற திட்டம், சமூக நீதியின் அடிப்படையிலானது.**

இலவச மின்சாரத் திட்டத்தை நீக்குவதற்கு முயன்ற அம்மையார், இந்த முறை நிதிச் சீர்திருத்தம் என்கிற வாதத்தை முன்வைத்தார். 1990-இல் சமூக நீதி அடிப்படையில் அறிவிக்கப்பட்ட ஒரு நலத்திட்டத்தை, 'நிதிச் சீர்திருத்தம்' என்ற பெயரில் அகற்ற முயன்றார். 'மின் வாரியத்துக்கான இழப்பின் காரணமாக மின்வாரியத்தின் நிதிநிலை சீர்குலையும்' என்று ஆணையம் முன்வைத்த வாதத்தையே, ஆட்சியாளராக அம்மையார் முன்வைத்தார்.

மின்சாரத்தின் உண்மையான உற்பத்திச் செலவுக்கும் வசூலிக்கப்படும் கட்டணத்துக்கும் இடையே மிகப் பெரிய இடைவெளி இருந்தது. விவசாயம், குடிசை வீடுகள், சலுகை பெறும் மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இலவச அல்லது குறைந்த கட்டண மின்சாரம் வழங்கப்பட்டதால், மின்சார வாரியத்தின் நிதிச்சுமை அதிகரித்தது உண்மைதான்.

மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் பார்வை முற்றிலும் பொருளாதார அடிப்படையிலானது. ஆனால், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்கிற திட்டம், சமூக நீதியின் அடிப்படையிலானது. 1992-ஆம் ஆண்டு காலத்தைவிட அதிகமாக, 2003-ஆம் ஆண்டில் பொருளாதார வாதங்கள் அழுத்தமாக இருந்தன. 'மின்வாரியம் நட்டத்தில் இயங்க முடியாது' என நாடாளுமன்றத்திலேயே வாதங்கள் வைக்கப்பட்டாலும், இலவச மின்சாரத்தை முழுமையாக அகற்றும் முயற்சி நடக்கவில்லை. காரணம், அதை நீக்கினால் அரசியல் அழுத்தம் உருவாகும் என்கிற நிர்ப்பந்தத்தை உருவாக்கியிருந்தார் கலைஞர்.

**...தொடரும்**

## ஆய்வு அமைச்சர்களின் அத்துமீறல்கள்!

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே, திருத்தங்கலில் உள்ள அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், தமிழ்நாடு தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, வகுப்பறைக்குச் சென்ற அவர், அங்கிருந்த மாணவிகளிடம் ஆங்கிலத்தில் சில கேள்விகளைக் கேட்டுள்ளார். அதை வீடியோவும் எடுத்திருக்கிறார்கள். இத்தகைய அநாகரிகச் செயலை 'ஆய்வு' என்ற பெயரில் தினந்தோறும் பள்ளிக் குழந்தைகளிடம் செய்துகொண்டிருக்கிறார்கள் த.வெ.க. அமைச்சர்கள். மாணவிக்குப் பதில் தெரிந்திருந்தால்கூட, கூட்டத்தில் இருக்கும்போது, வீடியோ கேமராவில் அதைப் பதிவுசெய்துகொண்டிருக்கும்போது, அவர்களுக்குப் பதற்றம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், 'முதல் பெஞ்ச் மாணவியே இப்படி இருக்கும்போது, லாஸ்ட் பெஞ்ச் மாணவிகளை நினைத்துப் பாருங்கள்' என மாணவர்களைத் தரக்குறைவாகப் பேசுகிறார், அமைச்சர் கீர்த்தனா.

பள்ளிக் கல்வித் துறைக்குச் சம்பந்தமே இல்லாத ஓர் அமைச்சர், தனது ரீல்ஸ் வெறிக்காகப் பள்ளிக்குச் சென்றதோடு மட்டுமில்லாமல், அங்கு மாணவர்களை ஊக்கப்படுத்தாமல் தாழ்த்திப்பேசுவது உளவியலாக மாணவர்கள் மத்தியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று சிந்திக்க வேண்டாமா? மொழி என்பது தொடர்புக்கான கருவிதானே தவிர, மொழியை வைத்து எவருடைய அறிவையும் ஆளுமைப் பண்பையும் எடைபோட முடியாது, எடைபோடவும் கூடாது. தேவை ஏற்படும்போது, எந்த மொழியையும் எவரும் கற்றுக்கொள்ளத்தான் போகிறார்கள். அரசுப் பள்ளிக் குழந்தைக்குச் சரளமாக ஆங்கிலம் தெரியவில்லை என்று வீடியோ எடுத்துப் பரப்பும் இவரால், தனியார் பள்ளிகளுக்குச் சென்று, தமிழ் எந்த அளவுக்கு, அங்கு சரளமாக எழுதப்படிக்கத் தெரிகிறது என்று ஆய்வு செய்வாரா?

தமிழையும் நன்கு கற்றுத்தர வேண்டுமென்று, தனியார் பள்ளி ஆசிரியர்களை, அதன் உரிமையாளரை இப்படி 'அதிகாரத் தொனி'யில் பேசிவிடுவாரா என்றும் சமூக வலைதளங்களில் பலர் கேள்வி எழுப்பியிருக்கின்றனர்.

தொழில் துறையில் முதலீடுகள் வெளியேறுவதைப் பற்றி இவருக்குக் கவலையில்லை, புதிய திட்டங்கள் உருவாக்குவதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை. ஆனால், மாணவர்களைத் தாழ்த்திப் பேசுவதும், கடந்தகால அரசின் திட்டங்கள் குறித்துத் தவறாகப் பேசுவதும், அன்றாடம் ரீல்ஸ் போடுவதும்தான் நடந்துகொண்டிருக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



### இடைத்தேர்தலில் உற்சாகப் பரப்புரை!



அ.முஹம்மது சாதிக்

2000-ஆம் ஆண்டு, திருச்சி - 2 தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், திறந்த வாகனத்தில் பரப்புரை மேற்கொண்டார். அண்ணன் 'இடிமுழக்கம்' ரகுமான்கான் அன்று பரப்புரையின்போது தலைவருடன் உற்சாகமாக வலம் வந்த காட்சி. அப்போது, பகுதிப் பிரதிநிதியாக இருந்த என் தந்தை ஆர்.அனிபா பற்றி பரப்புரையைச் சிறப்பாக நடத்தி முடித்த நேரத்தில் எடுக்கப்பட்ட படம்.

**- அ.முஹம்மது சாதிக்,
மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்,
திருச்சி மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### நீதிமன்றம் செல்லட்டும்!

1953-ஆம் ஆண்டு ஜூலை மாதம், கழகம் அறிவித்த மும்முனைப் போராட்டம் திட்டமிட்ட தேதிக்கு முன்பாகவே தொடங்கிவிட்டது. ஜூலை 13-ஆம் தேதி இரவு, பேரறிஞர் அண்ணாவும் மற்ற நான்கு தலைவர்களும் கைதுசெய்யப்பட்ட நிலையில், அடுத்த நாள் காலை சட்டமன்றத்தில் எதிரொலித்தது. திராவிட இயக்கத்தின் முக்கியத் தலைவர்களை எப்படிக் கைதுசெய்யலாம் என உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு சபாநாயகர், 'அவர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கலாம். சட்டமன்றத்தில் விவாதிக்க முடியாது' என்றார். சென்னை மாநகராட்சியிலும் கடும் வாக்குவாதம் நடைபெற்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900